## அத்தியாயம் ஏழு

# எரேமியாவின் புலம்பல் புத்தகம்

### “எப்படியிருந்தாலும் தேவன் உன்மேல் அன்பாயிருக்கிறார்”

எரேமியாவின் புலம்பல் புத்தகம் எரேமியாவின் புத்தகத்தின் ஒரு தொடர்ச்சியாகும். வரப்போகும் பாபிலோனிய சிறையிருப்பைப்பற்றிய தீர்க்கதரிசன வெளிப்பாட்டை தேவன் எரேமியாவுக்குக் கொடுப்பதால் அவர் அழுகிறார். பெரும்பாலான மக்கள் சிறைக் கைதிகளாகக் கொண்டுபோகப்பட்ட பின்பும், தீர்க்கதரிசி யூதாவில் இன்னும் இருப்பதோடு எரேமியாவின் புத்தகம் முடிவடைகிறது. அவர் எகிப்துக்குக் குடிபுகுந்ததுபோல் தோன்றுகிறது, பாரம்பரியப்படி அவர் அங்கே இரத்தசாட்சியாய் மரித்தார் என்று சொல்லப்படுகிறது. மற்ற வேதபண்டிதர்கள் எரேமியா, தாம் அதிகமாக நேசித்த யூதா மக்களுக்குப் பிரசங்கிக்க பாபிலோன் நாட்டுக்குப் போனாரென்றும், சிலர் அவர் தம்முடைய கடைசி நாட்களை யூதா நாட்டில் செலவிட்டார் என்றும் நினைக்கின்றனர்.

எரேமியாவின் புலம்பல் புத்தகம் சரியான பெயரைக் கொண்டுள்ளது. ‘‘அழுதுகொண்டிருக்கும் தீர்க்கதரிசி’’ இன்னும் அதிகமாய் அழுகிறார். ஏனெனில் அந்தத் தேசத்தைத் தோற்கடித்தவர்கள் அவர் நேசித்த மக்களில் பலரை படுகொலை செய்தனர். படுகொலை செய்யப்படாதவர்கள் சிறைக்கைதிகளாகவும் அடிமைகளாகவும் தூர தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டனர்.

எசேக்கியேல், தானியேல் போன்ற மற்ற தீர்க்கதரிசிகளாலும் கூறப்பட்ட பிரச்சினைகளில் ஒன்றைப் பற்றி புலம்பலிலும் காண்கிறோம். அதாவது யூதர்கள் தேவாலயத்தின் அருகில் இருக்க முடியாது என்று வருந்தினர். யூதர்கள் தேவாலயம் தேவனுடைய பிரசன்னத்தினால்

நிறைந்துள்ளது, அவர் அங்கு வாசம் செய்கிறார் என விசுவாசித்தனர். உண்மையில் அவருடைய தெய்வீகப் பிரசன்னம் எருசலேம் தேவாலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தது. இந்த பக்தி நிறைந்த தீர்க்கதரிசிகளுக்கு தேவாலயம் தேவன் தங்கியிருக்கும் இடம் என்பதில் ஒரு அர்த்தம் இருக்கிறது. இதனாலேயே தானியேல் தீர்க்கதரிசி ஜெபிக்கும்போது எருசலேமுக்கு நேராகப் பார்த்து ஜெபித்தார். பாபிலோனில் வாசம் செய்யும் தேவனுடைய மக்களுக்கு தேவன் இப்போது எங்கேயிருக்கிறார்? எருசலேம் அவர்களுக்குரிய தேவனுடைய நகரம் என்பதால் அவர்கள் தங்கள் பரிசுத்த நகரத்திலிருந்து, பரிசுத்தராகிய தேவனிடமிருந்தும் பிரிக்கப்பட்டதாக உணர்ந்தனர்.

## எரேமியாவின் மலைக்குகை

ஒரு மலையின் மேலிருந்த குகையில் உட்கார்ந்து கொண்டு எரேமியா புலம்பல் புத்தகத்தை எழுதினார். ''கொல்கதா'' என்றழைக்கப்படும் மலையில் இன்றும் ''எரேமியாவின் குகை'' என்னபப்பட்ட இடம் இருக்கிறது. தேவனுடைய தெய்வீக கிருபையின்படி இயேசு கிறிஸ்து உலகத்தின் பாவங்களுக்காக மரித்த கல்வாரி மலையில் எரேமியாவின் குகை இருக்கிறது.

## புலம்பலின் இலக்கிய வடிவம்

புலம்பல் ஒரு அழகான இலக்கியமாகவும் உள்ளது. அதனுடைய ஐந்து அதிகாரங்களும், ஐந்து பாடல்களை அல்லது இரங்கற்பா உடைய மிகச்சிறந்த கவிதைப் படைப்பாகும். ஒவ்வொரு அதிகாரமும் ஒரு தனிக் கவிதையாயிருக்கிறது.

புலம்பலில் காணும் ஏவப்பட்ட செய்தி, பாபிலோனின் தோல்வியையும் சிறையிருப்பையும் மையமாகக் கொண்டது. இந்தச் செய்தி விளக்கமாகவும் மிகுந்த உணர்ச்சியோடும் விவரிக்கப் பட்டிருக்கிறது, "எருசலேம் குமாரத்தியே, நான் உனக்குச் சாட்சியாக என்னத்தைச் சொல்லுவேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? சீயோன் குமாரத்தியாகிய கன்னிகையே, நான் உன்னைத் தேற்றும்படிக்கு உன்னை எதற்கு நிகர் சொல்வேன்? உன் காயம் சமுத்திரத்தைப்போல் பெரிதா யிருக்கிறதே, உன்னைக் குணமாக்குகிறவன் யார்?" (புலம்பல் 2:13). எரேமியா, பாபிலோன் வல்லரசு போன்ற ஒரு வல்லரசால் ஒரு பட்டணம் தோற்கடிக்கப்படும்போது அது எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்று தெளிவாகக் கூறுகிறார்.

இந்தப் புத்தகம் துக்கத்தைப்பற்றியும் நம்பிக்கையின்மை பற்றியுமே கூறப் போகிறது என்று நாம் நினைக்கும் அந்த வேளையில்,

எரேமியா நம்பிக்கையின் அழகிய தீர்க்கதரிசனத்தோடு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். துன்புறுத்தப்படுதலின் உச்ச நிலையில் யோபு இதே காரியத்தைச் செய்தார் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கக் கூடும் (யோபு 19:25, 26). தம்முடைய புலம்பலின் மூன்றாம் அதிகாரத்தில், சற்றும் நம்பிக்கையில்லாத நிலையில், எரேமியா அற்புதமான ஒரு தீர்க்கதரிசன வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டார், ''நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன். தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது" (22-26) என்று காண்கிறோம்.

எரேமியாவுக்கு வெளிப்படுத்தப்பட்ட நம்பிக்கையின் செய்தி இது: தேவன் நம்மீது அன்பு செலுத்துவதை ஒருபோதும் நிறுத்தமாட்டார்! நாம் பாவம் செய்யும்போதும், நம்மீது அன்பாயிருக்கிறார். நம்முடைய நம்பிக்கை தேவனுடைய அன்பில் இருக்கிறது. சிறைப்பிடிக்கப் பட்டவர்களை பாபிலோனுக்கு கொண்டு சென்றபோது எரேமியா அவர்களிடம், ''உங்களுடைய செல்வத்தையோ, பலத்தையோ ஞானத்தையோ அல்லது கல்வியறிவையோ குறித்து மேன்மை பாராட்டாதிருங்கள். தேவனுக்கு மகிமை செலுத்துங்கள். நீங்கள் தேவனைத் தெரிந்துகொண்டு அவரில் பரிபூரணப்படுங்கள். தேவனுடைய நிபந்தனையற்ற ஒருபொழுதும் மாறாத அன்பையும் இரக்கத்தையும் நம்புவதனால் நீங்கள் தேவனைக் காண முடியும். தேவனுடைய அன்பை ஒரு நேர்மறையான (நல்ல) நடவடிக்கை மூலம் பெற்று கொள்ளவோ அல்லது எதிர்மறையான (தவறான) நடவடிக்கையால் இழந்துவிடவோ முடியாது என்று தேவன் எரேமியாவுக்கு உணர்த்துகிறார். தேவன் நிச்சயமாய் ஒருபோதும் நம்மீது அன்புசெலுத்துவதை நிறுத்த மாட்டார்.

## தேவனுடைய அன்புக்கு நிரூபணம்

புலம்பல் மூன்றாம் அதிகாரத்தில், ''ஆண்டவர் கட்டளையிடாதிருக்கக் காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்? உன்னதமானவருடைய வாயிலிருந்து தீமையும் நன்மையும் புறப்படுகிறதில்லையோ? உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன்? அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுகிறதென்ன? நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்" (37-40).